**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.31/2024
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : குணசேகரன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of July 2024.

11.07.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் மயில்ஸ்டோக் என்ற இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். அசா.1 மணிகண்டன் எனது கடையில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எனது கடையில் எதிரி முனியசாமிக்கும், அசா.1 மணிகண்டனுக்கும் இடையே பிரச்சனை நடந்து அசா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததை சென்று பார்த்தேன் என்றால் சரிதான்.

போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள் கையொப்பம் எதற்கு வாங்கினார்கள் என்று தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.31/2024
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : சண்முகவேல் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of July 2024.

11.07.2024

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் எதுவும் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 20.01.2024ம் தேதி 20.40 மணியளவில் நானும், முருகேசன் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது முதுகுளத்தூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்

வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.